Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி மீ 03 வெள்ளிக்கிழமை (19-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 226

## வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதியில்

# கரை இறங்கிய படை

# நகர முடியாது திணறல்!

## புலிகளின் நெருக்குதல் தீவிரமடைகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 19

வெற்றிலைக்கேணி -- கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய படையினர் ஆனையிறவுப் பக்கமாக முன்னேற முயன்று வருகின்ற போதிலும், புலிகளின் கடும் எதிர்ப்பினால் அவர்கள் நகர முடியாமல் திணறுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் நெருக்குதல் தீவிரமடைந்து வருவதை அடுத்து தரையிறங்கிய படையினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு, தாம் இறங்கிய இடத்தில் தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொள்வதில் முனைப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடல் வழியாகத் தரையிறங்கி வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தில் நிலைகொண்டிருக்கும் படையினர் ஐந்தாவது நாளாக நேற்றும் வாகனங்கள் சகிதம் ஆனையிறவுப் பக்கமாக முன்னேற பல வழியிலும் முயற்சி எடுத்தனர்.

பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள், ஹெலிகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## குண்டு வீச்சில் விவசாயி காயம்

தாளையடி, ஜூலை 19

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனையில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சில் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த இளம் விவசாயி ஒருவர் பலத்த காயமடைந்தார்.

புலோலியைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி லோகநாதன் (வயது 24) என்பவரே காயமடைந்தவராவார். இவர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

[உ-144)

## கடற்படையினர் எரிகுண்டு வீச்சு!

தாளையடி, ஜூலை 19

வடமராட்சி கிழக்கு கடலில் தரித்து நிற்கும் கடற்படைக் கப்பல்கள் குடிமனைகளை நோக்கி எரிகுண்டுகளை வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் வீடுகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன.

உடுத்துறைப் பகுதியில் பல வீடுகள் எரிகுண்டினால் தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளன.

பீரங்கித் தாக்குதலினால் தாளையடி தபால் நிலையம் உட்பட பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் பலத்த சேதம் அடைந்துள்ளன. [உ-144]

## வல்லிபுர ஆழ்வார் ஆலயம் குண்டு வீச்சில் தப்பியது!

தாளையடி, ஜூலை 19

பிரசித்தி பெற்ற புராதன விஷ்ணு ஆலயமான நாகர் கோவிலிலுள்ள ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஸ்ரீலங்கா விமானப்படையின் பொம்மர் குண்டு வீச்சில் மயிரிழையில் தப்பியுள்ளது.

நேற்றுக் காலை 9 மணியளவில் அப்பகுதிக்கு மேலால் பறந்துவந்த பொம்மர் ஒன்று கோயில் அயலில் குண்டு ஒன்றை வீசியது.

இராஜகோபுரத்திற்கு அண்மையில் குண்டு விழுந்தபோதிலும், கோபுரம் சேதம் ஏதுமின்றித் தப்பியது.

சுற்றாடலில் உள்ள மடத்தின் கூரைப் பகுதி சேதமடைந்தது (உ-144)

### போர்க்களப் பகுதிக்கு

## கால் மணிக்கு ஒரு தடவை விமானங்கள் வருகின்றன!

மணற்காடு, வெற்றிலைக்கேணி ஊடாக—போர்க்களப் பகுதிக்கு 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை விமானங்களும். ஹெலிகளும் வந்து செல்கின்றன.

அதே சமயம் ஸ்ரீலங்கா விமானப் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல் பிரதேசத்தை நேற்று வடமராட்சி கிழக்கு முழுவதிற்கும் விஸ்தரித்துள்ளனர்.

இதுவரை தாளையடி தொடக்கம் கட்டைக்காடு பகுதிகளிலேயே அதிகளவு குண்டு வீச்சுக்கள் இடம்பெற்று வந்தன.

ஆனால் நேற்று வடமராட்சி கிழக்கில் 32 மைல்கள் நீளப் பிரதேசங்களில் ஆங்காங்கே குண்டு வீச்சுக்களும், ஹெலியின் றொக்கட் மற்றும் கலிபர் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. [ஓ-144]

## கடற்படைக் கப்புலில் அடிக்கடி இறங்கும் ஹெலி!

பலாலியிலிருந்து அடிக்கடி வெற்றிலைக்கேணிப்பகுதிக்கு பறந்து செல்கின்ற ஹெலிக்கொப்டர்கள், அப்பகுதிக் கடலில் நங்கூரமிட்டுள்ள கடற்படைக் கப்பலில் இறங்கி ஏறுகின்றன.

ஹெலிக்கொப்டர்கள் வந்து திரும்பிய கையோடு கடற்படைக் கப்பலில் இருந்து சிறிய படகுகள் கரைக்கு வந்து செல்வதாகவும் தெரியவருகின்றது.

(உ-144)

## தரையிறங்கிய துருப்புகளில் ஒரு பகுதி செயல் இழப்பு!

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களினால் ஐம்பதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்துள்ளனர். இருநூறுக்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு தரையிறங்கிய துருப்புகளில் எட்டில் ஒரு பங்கினர் செயல் இழந்திருக்கிறார்கள் என்று பி. பி. ஸி. நேற்று தகவல் வெளியிட்டது.

தரையிறங்கிய படையினர் எதிர்பார்த்தபடி முன்னேற முடியவில்லை என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. [உ-3]

## ஆனையிறவு படை முகாமை மூடும் எண்ணம் இல்லை!

### பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க தகவல்

கொழும்பு, ஜூலை 19

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து படையினரை வெளியேற்றி. அந்த முகாமை கைவிடும் யோசனை எதுவும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் ஜெனரல் ரணதுங்க இந்த யோசனையை நிராகரித்தார்.

இதேவேளை—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமா — ஜா சந்திப்பு

கொழும்பு, ஜூலை 19

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா நேற்று ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசினார்.

ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்தின் உத்தேச புதுடில்லி விஜயம் மற்றும் நவம்பரில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாடு ஆகியவை பற்றி இருவரும் பேச்சுக்கள் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-எ]

## ஆனையிறவுக்கு ஆடிக் கூழ்!

காங்கேசன்துறை, ஜூலை 19

ஆனையிறவுக் களத்தில் யுத்தம் செய்யும் போராளிகளுக்கு முட்டை மா, பயிற்றம் பணியாரம், பருத்தித்துறை வடை, பொரி உருண்டை ஆகிய உலர் உணவுகளை மட்டும் மக்கள் வாஞ்சையோடு அனுப்பவில்லை.

தித்திக்கும் பனங்கட்டியும், உழுத்தம்மாவும் சேர்த்துக் காய்ச்சிய — ஆடிக் கூழும் போர் முனையில் சலியாது சமரிடும் புலிகளுக்கு அனுப்பப்பட்டன.

இணுவில் பகுதி பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று முன்தினம் ஆடிக் கூழ் காய்ச்சி அதனுள் வடையும் சேர்த்து ஆனையிறவுக்கு அனுப்பியிருந்தனர். [அ-68]

## வவுனியாவில் ஊரடங்கு ஞாயிறன்று தளர்வு

வவுனியா மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு உத்தரவை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நீக்குவதாக கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் உறுதியளித்திருக்கிறது.

தொண்டர் நிறுவனங்களின் கோரிக்கையைத் தொடர்ந்தே ஊரடங்கைத் தளர்த்துவதற்குக் கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

வடமாகாணத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல தொண்டர் நிறுவனங்கள் தமது நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வசதியாக வவுனியாவில் அமுல் செய்யப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை நீக்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தன. (அ-3)

## முல்லைத்தீவில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

நேற்றுக் காலையில் முல்லைத்தீவு இராணுவ முகாம் காவலரணில் இருந்து முன்னேறி வந்த படையினர் புலிகளின் தாக்குதலால் பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 7.40 மணியளவில் காவலரணில் இருந்து 100 யார் தூரம் முன்னேறி வந்த படையினரை வழிமறித்து புலிகள் தாக்கினர்.

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் முகாம் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## கிரான்குளம் கிராமத்தில் 24 தமிழர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 19

மட்டக்களப்பு மாவட்டம் செட்டிபாளையம் முகாம் படையினரும் ரெலோவினரும் சேர்ந்து கிரான்குளம் கிராமத்தைச் சுற்றி வளைத்து அப்பாவி தமிழ் மக்களைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

16 ஆம் திகதி ஆண் - பெண் வேறுபாடின்றி 11 பேரும், நேற்றுக் காலையில் 13 பேரும் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Typewriters: Standards. Portables, ஆங்கிலம், தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் 'Facit' Hand Operated Adding Machine விற்பனைக்கு. பியூடோ தட்டச்சு நிலையம், 7, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (ஞானம்ஸ் ஸ்ரூடியோ முன்பாக) (சி/0256)

### யாருடைய மோதிரம்

சில நாட்களுக்கு முன் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் தவறவிட்ட மோதிரத்தை ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். மினி பஸ் இல. 30 சிறி 5522 செ. கனகரத்தினம் புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி. (4207)

### மில்க்வைற்

வேப்பெண்ணெய் வீட்டில் விளக்கெரிக்கச் சிறந்தது. பயிர் காப்புக்கு உகந்த பூச்சி பீடைகொல்லி. போத்தல் ரூபா 90/-, அரைப் போத்தல் ரூபா 45/- (போத்தலுடன்) ''மில்க்வைற்'', யாழ்ப்பாணம். [சி/0245]

### ரைப்ரைட்டர் சேவை

தட்டச்சு இயந்திரங்கள [Typewriters] வாங்கவும், விற்கவும் மற்றும் சிறந்த முறையில் திருத்தவும் தொடர்பு கொள்ளவும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-0194)

### திருமண சேவை

உதவி வைத்தியர் பட்டதாரிகள், உதவி அரசாங்க அதிபர், நூலகவியலாளர், விரிவுரையாளர்களாக கடமையாற்றும் பெண்களுக்கு தகுந்த வரன்கள் தேவை. தொடர்பு: கு. திருவிளங்கம், 16/16, வளன்புரம், கொழும்புத்துறை [2-00 மணிக்குப் பின்]. (17535)

### கணக்கியல் கோட்பாடுகள்

அடிப்படை நவீன கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்து விட்டது. ஆக்கம்: N. ராஜன் B. Com சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாக பெறுவோருக்கு விஷேட கழிவு வழங்கப்படும். (சி-0253)

### தமிழ் வழி

எழுத்தாளர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே நீங்கள் எழுதுபவற்றை தூய தமிழில் செய்ய விரும்புகிறீர்களா? கொக்கூர்கிழான் தொகுத்த தமிழ் வழி துணை செய்யும். குழந்தைகளுக்குத் தூய தமிழில் பெயர்கள் வைப்பதற்கு இந்நூலில் பட்டியல் உண்டு. இது வரதர் வெளியீடு: ரூபா 30/- புத்தக சாலைகளில் கிடைக்கும். (4203)

### அறிவித்தல்

புளியங்கூடல் வேலணையில இயங்கி வந்த எனது வைத்திய நிலையங்கள் தற்காலிகமாக மானிப்பாய் வீதியில் உள்ள 198/1, பொன்னப்பா ஒழுங்கையில் (ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில்) இயங்கி வருகின்றது. வைத்தியர் ச. சிவசம்பு. (17530)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை காலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4170]

### தேவை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் முற்றிலும் சீலிங் அடித்த, நான்கு அறைகள் கொண்ட ஒரு நவீன வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: இல. 324, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (17555)

### பணிப்பெண் தேவை

நான்கு பேர் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு உதவிக்கு 15 வயதிற்குட்பட்ட ஒரு பணிப் பெண் தேவை. தொடர்பு: இல. 325, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (17556)

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0244)

### மணமக்கள் தேவை

பலதரப்பட்ட உத்தியோகத்தர்களும் செவ்வாய் குற்றமுள்ள பெண்களும், ஆண்களும் இருக்கிறார்கள். உங்களுக்கு ஆவணியில் திருமணம் நடக்க வேண்டுமாயின் உடன் சாதகத்துடன் ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி நாட்களில் காலை 9 மணியில் இருந்து 4.30 மணி வரை ஆபிஸில் தொடர்பு கொள்ளவும்: ABCDE 328, நாவலர்றோட், ஆனைப்பந்தி. (17542)

## பிரதிஷ்டை ஆராதனை

கல்வாரி தேவாலய கிளை ஊழியத்திற்கான பிரதிஷ்டை ஆராதனை 20-7-91 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

இடம்:-

இல. 33, கிராம விஸ்தரிப்புத் திட்டம்,
பாற்பண்ணை, திருநெல்வேலி.

போதகர், விசுவாசிகள்.

(17548)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 21-3-1915 மறைவு: 19-7-1988

திருமதி

**கிரேஸ் நேசம்மா செல்லத்துரை**

ஆண்டுகள் மூன்று சென்றாலும், எம்மை அன்போடும், பாசத்தோடும், சீராட்டி, தாலாட்டி, வளர்த்து, நல்நிலையில் வைத்துள்ள எமது அன்புத் தெய்வமாகிய அம்மாவின் ஆத்மா எமது பிதாவாகிய கடவுளின் சந்நிதானத்தில் என்றும் நிறைவாக இருக்கப் பிரார்த்திக்கிறோம்,

''இதோ மனிதர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்''.
வெளி 21:3


அருமைப் பிள்ளைகள்,
மருமக்கள்.

தேவி வில்லா,
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

[17540]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 23 - 10 - 1964



உதிர்வு: 19 - 06 - 1991

செல்வன்

**ஐயாத்துரை சிவானந்தன்**
**(சிவா)**

(19 - 06 - 1991 அன்று பிரான்சில் காலமானார்)

உம்மை கண் குளிர நாம் கண்டு
தம்பி! தம்பி! என்றிட என்று நீ
வருவாயோ! உன்வளம் பெற்று நாம்
மகிழும் நாளிலே தினம் துயர் பெற்று
வாடுகின்றோமே தம்பி!

உமது பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

4 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை.

(17547)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 05 — 1960



மறைவு: 19 — 06 — 1991

**நவரத்தினம் குலேந்திரா**
**(குலேந்திரன்)**

அன்பின் நண்பா, வாழவேண்டிய வயதில் காலன் உம்மை அழைக்க எண்ணியது ஏனோ? மின்னலென நீர் மறைந்த செய்தி கேட்டு இதயம் கலங்கி நிற்கிறோம்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பின் நண்பன்:
க. யோகேஸ்வரன்.

விளானை,
காரைநகர்.

(17286)

## மரண அறிவித்தல்கள்

### சுவாமிநாதன் திருஞானசம்பந்தன் B.A.

*[முன்னாள் அதிபர், அரசினர் ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு.]*

திரு. S. T. G. சம்பந்தன் (இளைப்பாறிய அதிபர், மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) 18-7-1991 அன்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற இராசம்மா - சுவாமிநாதன் தம்பதிகளின் இரண்டாவது புதல்வரும், காலஞ்சென்ற S. R. கனகசபை (ஓவிய வித்தியாதரிசி) தம்பதிகளின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரேமளா (ஆராய்ச்சி அலுவலகர்), சியாமிளா (ஒய்வுபெற்ற ஆசிரியை, கோ/கிறிஸ்தவ கல்லூரி), மஞ்சுளா (B.Sc.), நிர்மலா (இரசாயனவியல் அலுவலகர்), Dr. ஸ்ரீலதா, சுரேஷ் (H. N. B. Head Office), ஹேமலதா (ஆசிரியர், பேருவளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. T. ஜெயானந்தராஜா (U. K.), திரு T. இரவீந்திரன் (Ac/Ltd, ஈவினை), திரு. N. ஸ்ரீஸ்கந்தராஜா (U. K.), திரு. S. தர்மராஜா (Canada), Dr. K. ராதாகிருஷ்ணன் (நெல்லியடி), திருமதி சு. கௌரீஸ்வரி (H. N. B. Jaffna), திரு. K. செந்தூர்வேல் (ஆசிரியர், யா/வைத்தீஸ்வரா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயிரூபன், பிரேமசாயினி, ராதிகா, நீரஜா, கிருஷான், பிரியதர்சினி, நிரோஷினி, கௌரிநிஷா, திவாகர் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 19-7-1991 இன்று காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக இருபாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சியாமிளா இரவீந்திரன்.
(மகள்)

'சாயிகோட்டம்',
இருபாலை வீதி, இருபாலைச்சந்தி,
கோப்பாய்.

(17554)

### திருமதி கனகரெத்தினம் பராசக்தி

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், கொழும்பில் வசிப்பவருமாகிய திருமதி கனகரெத்தினம் பராசக்தி [14 - 07 - 1991] ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரெத்தினத்தின் [பிரபல வர்த்தகர், மு. க. கொழும்பு] அன்பு மனைவியும், காலஞ்சென்ற திலகவதி, காலஞ்சென்ற சத்தியவதி, கருணாகரன், சண்முகநாதன், ஜோதி, வடிவழகி, ஹரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காந்திமதி, சிவக்கொழுந்து, அருளம்மா, மயில்வாகனம் (பிரபல வர்த்தகர், கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் [15 - 07 - 1991] திங்கட்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி கண்ணையா காந்திமதி.

66/5, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[4208]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவகாசமில்லை

ஆனையிறவு முகாமில், விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உட்பட்டிருக்கும் இராணுவத்தினரை, மீட்டுக் காப்பாற்றுவதற்காக வெற்றிலைக்கேணி — கட்டைக்காடுப் பகுதியில் ஆயிரக் கணக்கில் அரசாங்கப் படையினர் தரை இறக்கப்பட்டிருப்பது பழைய செய்தி.

அவ்வாறு தரை இறக்கப்பட்ட படையினர், ஆனையிறவை நோக்கி முன்னேறிச் செல்ல முயன்றபோது, விடுதலைப் புலிகள் நடத்திய உக்கிரத் தாக்குதலினால் பின்னோக்கிச் சென்றார்கள் என்பது நேற்றைய செய்தி. அவர்கள் கொண்டு வந்த கவச வாகனங்களைப் புலிகள் சிதறடித்துச் சின்னா பின்னமாக்கினர் என்பதும் அதே செய்தியுடன் கிடைத்த தகவல்.

ஆனையிறவுப் போரை அகில உலகமும் அவதானித்துக் கொண்டிருக்கிறது. இரு நாடுகளுக்கு இடையேயான போருக்கு நிகராக அது கணிக்கப்படுகிறது. சிங்கள தேசத்தின் இராணுவமும், தமிழர் தேசத்தின் தேசிய இராணுவமும் நேருக்கு நேர் மோதும் மிகப்பெரிய களப்போர் இது என்பது இராணுவத்துறை வல்லாரின் மதிப்பீடு.

ஆகையால் இந்தப் போரில் தோற்றுவிட்டால், இராணுவத் தீர்வை ஸ்ரீலங்கா மறந்து போக வேண்டி வரும். அப்படி மறக்க மறுத்தால் மறந்துவிடுமாறு வெளிநாடுகளால் நிர்ப்பந்திக்கப்படலாம்.

இந்த அச்சம் உள்ளூர நெஞ்சை நெரிப்பதால், ஆனையிறவில் தோல்வி கண்டுவிடக் கூடாது என்று அரச படைகள் தமது முழுப் பலத்தையும் திரட்டிப் போரிடக் கொடுக்கை வரிந்து கட்டியிருப்பது பளிச்சென்று தெரிகிறது.

இந்தச் சூழ்நிலையில், தமிழர் வெற்றி இலக்கை அடைவதற்கு போராளிகளின் மனோபலம் மட்டும் போதாது. அவர்களின் ஆட்பலம் உயர வேண்டும். போராளிகளின் படைக்கு துணைப்படை ஒன்று அவசியம்.

களத்தில் காயமுறும் போராளிகளைப் பராமரித்தல், அங்கு தொடர்ந்து சமரிடும் போராளிகளுக்கு உணவு மற்றும் உதவிகளைச் செய்வதோடு மட்டும் மக்கள் நின்றால் போதாது. போராளிகளுக்கு உறுதுணையான ஒரு துணைப் படையாக மக்கள் அணி திரள வேண்டும். மக்கள் படை உருவாக வேண்டும்.

போராளிகளுக்கு அடுத்தடுத்த வட்டங்களில் நின்று சகல பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது அவசியம். அவ்வாறு ஒரு துணைப்படை- மக்கள் படை - இருந்தால் பிரதான போர்க் களத்துக்கு எதிரி வேறு வழிகளால் உடைத்துக் கொண்டு வரும் யுக்தியைக் கையாளாது தடுக்க முடியும். ஆகக் குறைந்தது தாமதப்படுத்தவேனும் முடியும்.

ஆனையிறவை வெற்றி கொண்டால் அது செய்யலாம், இது செய்யலாம் என்றோ அல்லது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் விமர்சனம் செய்தோ காலத்தைக் கழிக்கும் நேரம் அல்ல இது.

இறுதிக்கட்ட உச்ச நிலை வேளை இது. அதுவா, இதுவா என்று யோசிக்க அவகாசமில்லை. ஆனையிறவில் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள எல்லாத் தரப்பினரும், எல்லா வயதினரும், எல்லா வகை உதவிகளையும், உழைப்புகளையும் நல்க வேண்டிய வேளையாகும்.

## வெற்றி வேண்டி விசேட பூஜைகள்

யர்ழ்ப்பாணம், ஜூலை 19

ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பிற்கான யுத்தத்தில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட வீர வேங்கைகளின் ஆத்ம சாந்திக்காகவும், காயமடைந்த போராளிகள் பூரண சுகம் பெற வேண்டியும், களத்தில் நின்று போராடும் வேங்கைகளுக்கு ஆத்ம பலம் வேண்டியும் விசேட பூஜைகள் குடா நாடெங்கும் நடைபெறுகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மட்டுவில் வேரற்கேணி கந்த சுவாமி கோயிலில் விசேட பிரார்த்தனையும், மண்டைதீவு கண்டுப் புளியடி வீரபத்திரர் கோயிலில் விசேட பொங்கல் வழிபாடும் நடைபெறும்.

வண்ணை சிவன் கோயிலில் 27ஆம், 28 ஆம் திகதிகளில் பெருஞ்சாந்தி பூசை நடைபெறும். [த]

★

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திலும் இன்று காலை பூசையைத் தொடர்ந்து விசேஷ திருமுறைப் பிரார்த்தனை நடைபெற உள்ளது.

## மடு அகதி முகாமில் மீண்டும் உணவுப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஜூலை 19

மடு அகதி முகாமில் உணவுப்பொருள் கையிருப்பு முடிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் உடனடியாக ஊரடங்கு உத்தரவை நீக்கி உணவுப்பொருள்களை அங்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்க வேண்டும் என்று இந்த அகதி முகாமை நிர்வகித்து வரும் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சிடம் கோரியுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி 18 லொறிகளில் உணவுப் பொருகள் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டதாகவும்—

மறுநாள் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதால் திட்டமிட்டபடி பொருள்களை எடுத்துச்செல்ல முடியாது போய்விட்டதாகவும் அவர்கள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கு விளக்கியுள்ளனர். (உ-3)

## பலாலியில் ஹெலி நோட்டம்

பலாலி இராணுவ முகாம் சுற்றாடல் பகுதியில் நேற்று ஹெலி ஒன்று சுற்றிச் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டுக் கொண்டிருந்தது.

கட்டுவன், தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கீரிமலைப் பகுதிகளை மையமாக வைத்தே ஹெலி சுற்றியது.

இதனால் சுற்றுப்புற மக்கள் பீதியடைந்துள்ளனர்.

## தட, கள போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். மாவட்டத்தில் வட்டவை ரீதியாக நடைபெறவிருந்த தியாகி திலீபனின் ஞாபகார்த்த தட, கள விளையாட்டுப் போட்டிகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## சென்னை கீழ்பாக்கத்தில் நாட்டு வெடிகுண்டு வெடிப்பு

சென்னை, ஜூலை 19

சென்னை — கீழ்பாக்கத்தில் உள்ள சட்டக் கல்லூரி மாணவர் விடுதி வளாகத்திற்குள் நாட்டு வெடிகுண்டு மாதிரியான ஒன்று நேற்று வெடித்ததில் ஒரு பெண் கடுமையான காயங்களுக்குள்ளானார்.

அப்பெண் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

குப்பைத் தொட்டிக்குள் கிடந்த 'பிளாஸ்ரிக்' உறைக்குள் அந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்தது.

வெடிமருந்து நிபுணர்கள் அந்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர். [உ-எ]

## 47 தொன் இந்தியத் தங்கம் இங்கிலாந்தில் அடமானம்!

புதுடில்லி, ஜூலை 19

இந்தியன் ரிசேர்வ் வங்கி மேலும் 12.1 தொன் தங்கத்தை இங்கிலாந்து வங்கியில் வைப்புச் செய்திருக்கிறது.

இங்கிலாந்து வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட தங்கத்தின் மொத்த எடை 46.91 தொன் என்று மத்திய நிதி அமைச்சர் டாக்டர் மன் மோஹன்சிங் நேற்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

இம்மாதம் 4 ஆம் திகதிக்கும் 18ஆம் திகதிக்கும் இடையில் நான்கு தவணைகளில் இத்தங்கம் புதுடில்லியில் இருந்து லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக தங்கம் லண்டனுக்கு எடுத்துச் செல்வது முன்கூட்டியே தெரியப்படுத்தப்படவில்லை என்றும் அமைச்சர் மேலும் சொன்னார். [உ-எ]

## முகமாலையில் குண்டு வீச்சு!

தென்மராட்சி, ஜூலை 19

முகமாலைப் பகுதியில் குடியிருப்புகளை நோக்கி மூன்று பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

புதன்கிழமை நண்பகல் அளவில் நடந்த இத்தாக்குதலில் பல வீடுகள் சேதம் அடைந்தன.

பொம்மர்கள் வட்டமிட்ட போது மக்கள் பதுங்கு குழிகளுக்குள் மறைந்து கொண்டதால் உயிராபத்து தவிர்க்கப்பட்டது.

மரங்கள் பல முறிந்தன. பல கால்நடைகள் இறந்தன.

அதே சமயம் புதன் காலை கட்டைக்காட்டிலிருந்து திரும்பிய ஹெலி நாகர் கோவில் பகுதியில் றொக்கெட் தாக்குதல் நடத்தியது. சேதவிவரம் தெரியவில்லை. (இ-117)

## ராஜீவ் கொலை விசாரணை; 13ஆவது நபர் நீதிமன்றில்!

சென்னை, ஜூலை 19

தஞ்சாவூரில் அண்மையில் பொலீஸாரிடம் சரணடைந்த சண்முகம் என்பவரை, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பதின்மூன்றாவது சந்தேக நபராக, மத்திய புலனாய்வுத் துறையினர் நேற்று விசேட நீதிவான் எஸ். எம். சித்தீக் முன் ஆஜர் செய்தனர்.

அவரை 30 நாள் பொலீஸ் காவலில் வைக்கும்படி விசேட நீதிவான் உத்தரவிட்டார்.

ஏற்கனவே காவலில் வைக்கப்பட்டிருந்த பயஸ் மற்றும் பேரறிவாளன் ஆகிய சந்தேக நபர்களையும் மேலும் ஒரு மாத காவம் காவலில் வைக்கும்படி விசேட நீதிவான் பணித்தார்.

இதற்கிடையே புதுடில்லியில் கடந்த புதனகிழமை கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஓர் இளம்பெண்ணுக்கும் கனகசபாபதி என்ற வயோதிபருக்கும், ராஜீவ் காந்தி கொலையில் தொடர்பு உண்டா என்பதைக் கண்டறிவதில் புலனாய்வுக் குழு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என்று அறிவிக்கப்பட்டது. [உ-எ]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தாயக மீட்புப் போரில் காயமடைந்த போராளிகளைப் பராமரிப்பதற்கென ''பாலம்'' பணிமனையில் பெயர் பதிவு செய்த ஆண்கள் மற்றும் பெயர் பதிவு செய்யாத பரர்மரிக்க விரும்பும் அனைவரும் இன்று முற்பகல் 10 மணிக்கு ''பாலம்'' பணிமனைக்குச் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஒ]

## தப்பிய மீனவர்

வெற்றிலைக்கேணி, ஜூலை19

வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த இராயப்பு இராசேந்திரம் என்று மீனவர் இராணுவ நடவடிக்கையின்போது உயிர் தப்பி குடத்தனை வந்து சேர்ந்துள்ளார்.

தமது மனைவியினதும் ஆறு குழந்தைகளினதும் கதி தெரியாது தவிக்கும் இம் மீனவர் தற்போது குடத்தனை மணற்காட்டில் ப. தங்கராசா என்பவருடன் தங்கி இருக்கிறார். (இ)

## லண்டன் புறப்படவிருந்த 2 தமிழர் டில்லியில் கைது

புதுடில்லி, ஜூலை 19

தகுந்த பயண தஸ்தாவேஜுகளின்றி லண்டன் செல்லவிருந்த இரண்டு இலங்கைத் தமிழர்களை புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

அவர்களில் ஒருவர் பெண் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் இருவரும் தனித்தனியாக புதுடில்லியில் ஹோட்டல்களில் தங்கியிருந்தனர் என்றும், அவர்களுடன் ஹோட்டல்களில் தங்கியிருந்த சகாக்கள் தலைமறைவாகி விட்டனர் என்றும் கூறப்பட்டது.

புதுடில்லி நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்ட அவர்களில் பெண்ணை இம்மாதம் 31ஆம்திகதி வரையும், ஆணை இம்மாதம் 26 ஆம் திகதி வரையும் காவலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

அவர்கள் கைதானதைத் தொடர்ந்து, புதுடில்லி வழியாக தகுந்த பயணப்பத்திரங்களின்றி ஐரோப்பிய நாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் மோசடி வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய வானொலி தெரிவித்தது. (இ-எ)

## 34 வீடுகள் முற்றாக அழிவு

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதலின்போது முற்றாக அழிந்துபோன வீடுகளின் எண்ணிக்கை 34 என்று அறிவிக்கப்பட்டது.

சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 59 என்றும் அவற்றைத் திருத்த அரசு நிதி உதவி அளிப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிகழக அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று [19-7-91] பிற்பகல் 4 மணிக்கு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. [ஒ]

## பிரெஞ்சுக் குழுவின் சேவை தென்பகுதிக்கும் விஸ்தரிப்பு

கொழும்பு, ஜூலை 19

பிரெஞ்சு வைத்தியத் தொண்டு நிறுவனமான எம். எஸ். எப். அமைப்பு அடுத்த சில மாதங்களில் தென் மாகாணத்திலும் தனது பணியை ஆரம்பிக்கவிருக்கிறது.

எம். எஸ். எப். அமைப்பு இலங்கை அரசுடன் புதிய உடன் படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளவிருக்கிறது. அதன் பின்னரே தென்மாகாணத்தில் தனது வைத்திய பணியை ஆரம்பிக்கும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஐ. நா. அகதிகள் தூதராலயம் மற்றும் ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயல்படும் எம். எஸ். எப், அமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 1986இல் தனது பணியை ஆரம்பித்தது. இது தொடர்பாக இலங்கை அரசுக்கும் எம். எஸ். எப். அமைப்புக்கும் இடையே 13-11-1986 இல் உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்பாட்டை விஸ்தரிப்பதாகவே புதிய உடன்பாடு அமையும்.

இதே வேளை— எம். எஸ். எப். பணியில் சேர்ந்து கொள்ள இரண்டு சர்ஜன்கள், ஒரு 'அனஸ்தெற்றிஸ்ற்' மற்றும் இரண்டு பேர், கடந்த 7ஆம் திகதி கொழும்பு வந்தனர். அவர்கள் உடனடியாக மட்டக்களப்பு, பருத்தித்துறை, மடு அகதி முகாம் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இம் மாத முடிவுக்கு இடையில் மேலும் நான்கு பேர் எம். எஸ். எப். பணியில் சேர்ந்து கொள்ள கொழும்பு வருவர் என்று கூறப்படுகிறது. இவர்களில் இரண்டு பேர் 'அனஸ்தெற்றிஸ்ற்'கள் [illegible] மருத்துவ மாது ஆகியோர் அடங்குவர்.

## பதுங்குகுழி அமைப்பதில் மக்கள் மீண்டும் நாட்டம்

சாவகச்சேரி, ஜூலை 19

நள்ளிரவு வேளைகளில் அடிக்கடி ஷெல் வீச்சுகள் இடம் பெறுவதால் சாவகச்சேரிப் பகுதியில் பலர் புதிதாகப் பதுங்குகுழிகள் அமைப்பதிலும் ஏற்கனவே உள்ள பதுங்குகுழிகளை புதுப்பிப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

அதே சமயம் நுணாவில் மேற்குப் பகுதி மக்கள் பலர் இரவு வேளைகளில் மறவன் புலவு சென்று தங்கிவிட்டு காலையே திரும்புகின்றனர்.

சிலர் இராவுப்பொழுதை வீதிகளில் உள்ள மதவுகளின் உள்ளேயும் கழிக்கின்றனர். (இ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## திரு. குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்

[விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

முன்னேற்றத்தின் வேகம்
உன்னை இருபத்தைந்து வயதில்
விரிவுரையாளனாக்கிய போது,
உன் நடையில் வேகம்!
உன் பார்வையில் வேகம்!
உன் படிப்பித்தலில் வேகம்!
இறுதியில்
உன் முடிவையும்
வேகமாக்கிக் கொண்டாயோ?

உங்கள் நிரந்தரப் பிரிவால் துயருறும்:

**யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்**

(17560)

# மரண அறிவித்தல்கள்

## நா. சோதிலிங்கம்

[இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]

கொக்குவிலைச் சேர்ந்த நா. சோதிலிங்கம் [இளைப்பாறிய தலைமை ஆசிரியர்] 17 - 7 - 91 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு, திருமதி ஞானரத்தினம் அவர்களின் பெறாமகனும், நா. நாகரத்தினம், திருமதி சிவயோகம் முத்துராஜாவினதும் அன்புச் சகோதரனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17 - 7 - 91 அன்று கொக்குவிலிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:

**திருமதி சிவயோகம் முத்துராஜா**

குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில். [4209]

## சு. எதிர்வீரசிங்கம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சு. எதிர்வீரசிங்கம் [இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்] காலமானார்.

அன்னார் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செ. சுப்பிரமணியம் பொற்கொடி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், ஜெயவீரசிங்கம் [சுவிஸ்], ஜெயரட்ணசிங்கம் [உதவி முகாமையாளர் நியூசிலன்ட் பாம் அம்பேவல], ஜெயக்குமார், ஜெயசூரியர், ஜெயநேசன், ஜெயசங்கர், ஜெயசுந்தரி, ஜெயராணி [ஜேர்மனி], ஜெயஈஸ்வரி [திட்ட இணைப்பாளர் போரூட], ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபதி [பெரிய கட்டு], டோனேசன் [டோனேசன் பிறதர்ஸ் முருங்கன்], குணரட்ணம் [ஜேர்மனி], ஜீவராஜா [கிறிஸ் நேபர் சேர்விஸ்], புஸ்பம், அன்னலட்சுமி, சந்திரா, மனோரஞ்சிதமலர், சிவராஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [19-7-91] பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

**ஜெயசங்கர்**

வட்டுக்கோட்டை [17291]

## சின்னத்துரை இராமுப்பிள்ளை

கோண்டாவில் கிழக்கில் வசித்துவந்த சின்னத்துரை இராமுப்பிள்ளை அவர்கள் 18 - 7 - 91 இல் காலமானார். இவர் செல்வபால அற்புதநர்த்தன விநாயக ஆலய ஸ்தாபகரும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, பங்கயச்செல்வி ஆகியோரின் அன்புக் கணவரும், விஜயலட்சுமி, விஜயகுமாரி, லலிதகுமாரி, குசலகுமாரி [அவுஸ்ரேலியா), திருமால்மருகன் (சுவிஸ்), ஸ்ரீமுருகன் (ஜேர்மனி), நாகலோஜினி (சுவிஸ்), திருநாவுக்கரசு (மாவீரர் ஜெமினி) ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார். மகாதேவா (வர்த்தகர்), சிவசம்பு (டுபாய்), சிவபாலன் (யாழ் / உள்ளூராட்சி திணைக்களம்), ஜெயமோகன் (அவுஸ்ரேலியா), சிவகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி இரத்தினம்மா, காலஞ்சென்ற பாலசிங்கம், நடராஜா (வர்த்தகர்), நவரட்ணம் (வர்த்தகர்) இராசலிங்கம் (மலேசியா), திருமதி கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி கேமலா (முல்லைத்தீவுகச்சேரி), மோகனராஜ் (டென்மார்க்), விஜயமாலா, விஜயராஜ், சிவகுமார், சிவகரன், சிவநாதா, சிவராஜ், சிவறஞ்சன் சர்வேஸ்வரன், சபேசன், சாறங்கன், சிவசோதி (முல்லைத்தீவு கச்சேரி) ஆகியோரின் அன்புப் பேரனும் பிரதீபாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19 - 7 - 91) 10.00 மணிக்கு கோண்டாவில் கிழக்கு செல்வநாயகம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

**S. சிவபாலன் (மருமகன்)**

கோண்டாவில். [17561]

## குடியேற்றம்

மன்னாரத் தீவில் உள்ள எருக்கலம்பிட்டியில் 100 முஸ்லிம் குடும்பங்களை படையினர் வற்புறுத்திக் குடியேற்றியுள்ளனராம்.

மன்னாரில் இருந்து வெளியேறிய முஸ்லிம் குடும்பங்களில் 100 குடும்பங்களையே படையினர் மீளக் குடியேற்றி உள்ளதாகவும், அவர்களுக்கு பாதுகாப்பும், குடியேறுவதற்கான செலவுகளும் வழங்கியிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு மட்டும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-3]

## புதுடில்லி வங்கியில் 2 லட்சம் கொள்ளை

புதுடில்லியில் கடந்த வாரம் தனியார் வங்கியொன்று இனந்தெரியாத முகமூடி நபர்களால் கொள்ளையிடப்பட்டது. ஒரு காவலாளி உட்பட நான்கு பேரைச் சுட்டுக்கொன்ற கொள்ளையர்கள், வங்கியிலிருந்து 2 லட்சம் ரூபாவை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

புதுடில்லியில் இந்த ஆண்டு இடம்பெற்ற இரண்டாவது வங்கிக் கொள்ளை இதுவாகும். [த-10]

## அனுமதி மறுப்பு

பருத்தித்துறை இறங்குதுறையைப் புனரமைக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

இந்தத் தகவலை அத்தியாவசிய சேவைகள் நாயகம் யாழ். அரச அதிபருக்கு நேற்றுத் தெரிவித்தார்.

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியின் நீளத்தை மேலும் 60 அடியால் அதிகரிப்பதன் மூலம் பொருள்களை இறக்கும் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இத்தகைய புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்க பாதுகாப்பு அமைச்சு அடியோடு மறுத்துவிட்டதாக அரச அதிபருக்கு தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3-5]

## கரை இறங்கிய..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன கடும் வானத்தாக்குதல்களையும், சடற்படைக் கப்பல்கள் பீரங்கித் தாக்குதல்களையும் நடத்த, தரையிறங்கிய படையினர் முன்னேற முயன்றனர்.

ஆனால் தரையிறங்கிய துருப்புகளுக்கு மிக நெருக்கமாக நிலை கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் அவர்களை நகரவிடாது தாக்கி வருகின்றனர்.

இரவு பகலாக தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும், தரையிறங்கிய படையினரின் நடவடிக்கையில் முன்னேற்றம் ஏதும் இல்லை என்றும் —

நேற்று மாலை வரை படையினர் தொடர்ந்தும் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய சுற்றாடல் பகுதியிலேயே முடங்கிக் கிடந்தனர் என்றும் பிந்திக் கிடைத்த யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில்—

தரையிறங்கிய படையினரில் இரு அதிகாரிகள் உட்பட ஐம்பதுக்கும் அதிகமானோர் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்திருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-144-15]

## ஆனையிறவு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனையிறவுப் பகுதியில் மேலும் படை முகாம்கள் [illegible] யாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார். (உ-எ)

# குடாநாட்டில் நேற்று அஞ்சலிக் கூட்டங்கள்

நடந்து வரும் தாயக மீட்புப் போரில் வீரமரணமடைந்த போராளிகளுக்காக குடாநாட்டில் பல பகுதிகளிலும் நேற்று அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன.

நவாலி சென் பீற்றர்ஸ் றோ. க. பாடசாலையில் நேற்று ஆறு போராளிகளின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

வெற்றிலைக்கேணி — கட்டைக்காடு பகுதியில் வீரமரணமடைந்த நித்தியானந்தம் [சிவசிதம்பரம் சிவகுமார் சுன்னாகம்], அங்கதன் [ஜெயதிலக நிசாந்தன் — சுன்னாகம்], சுபைகீர் [கந்தசாமி இராஜேந்திரம் — அரியாலை], சபர் [கணபதிப்பிள்ளை சித்திரவேலு— மூதூர்], ரமேஷ் [சின்னத்துரை சபேசன் — அளவெட்டி] மற்றும் மணலாறில் களப்பலியான தியாகலிங்கம் [மகர்லிங்கம் ஜெயலிங்கம்— சுழிபுரம்], ஆகியோரின் புகழுடல்களே நேற்று நவாலி வைக்கப்பட்டிருந்தன.

அங்கு விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இறுதியில் மாலையில் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

சாவகச்சேரி, வடமராட்சி பகுதிகளிலும் நேற்று அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன. [ஓ-3]

### பாடசாலை முடிவுற்றதும்

# மாணவரை பகுதி பகுதியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

பாடசாலை முடிவுற்றதும் வகுப்பு ரீதியில் பகுதி பகுதியாக மாணவர்களை வீட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் அதிபர்களைப் பணித்துள்ளார்.

இன்று முதல் பாடசாலைகள் வழமைபோல் இயங்கத் தொடங்குவதை அடுத்து அவர் இந்தப் பணிப்பை விடுத்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் பின்வரும் நடைமுறைகளைக் கைக்கொள்ளுமாறும் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்

★ நேரசூசிக்கேற்ப பாடசாலைகளை நடத்துதல்.

★ மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தல்.

★ உடற்பயிற்சிச் செயற்பாடுகளை மரங்களின் கீழ் நடத்த நடவடிக்கை எடுத்தல்.

★ வீதி ஒழுங்கு முறைகளைப் பற்றி மாணவர்களுக்கு காலைக் கூட்டங்களில் தெளிவாக விளக்கமளித்தல்.

தற்போதைய சூழ்நிலையில், விளையாட்டுப் போட்டி, மாணவர் கல்விச் சுற்றுலா, பரிசளிப்பு விழா, கலை விழா என்பனவற்றைப் மறுஅறிவித்தல் வரை பின் போடுமாறும் அதிபர்களை அவர் மேலும் கேட்டுள்ளார். [ஓ-5]

### வடமராட்சி கிழக்கில்

# இடம் பெயர்ந்தோருக்கு விசேட நிவாரணம்

தாளையடி, ஜூலை 19

மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் ஆகிய எட்டுக் கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு அவர்கள் வடமராட்சி கிழக்கில் தங்கியிருக்கும் இடங்களிலேயே 10 ஆம் கட்ட உலர் உணவு நிவாரணம் விசேடமாக வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கையை யாழ். அரசாங்க செயலகம் மேற்கொண்டுள்ளது.

மயிலிட்டி, திருமலை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து ஏற்கனவே இடம் பெயர்ந்து, முதலில் குறிப்பிட்ட எட்டுக் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தங்கியிருந்த மக்களுக்கும் அவர்கள் தற்போது இடம்பெயர்ந்து இருக்கும் இடங்களில் 30 ஆம் கட்ட உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்குவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆயினும், 1500 ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறுபவர்கள் முன்னரைப் போல், அதற்கான பணத்தைச் செலுத்தியே பெற வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-144)

# பிரிவினையை அடக்க தேசிய துப்பாக்கிப் படை

## இந்தியாவில் புதிதாக அமைப்பு

லண்டன், ஜூலை 19

இந்தியாவில் பிரிவினைவாதிகளாலும், பயங்கரவாதிகளாலும் ஏற்படுத்தப்பட்டுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த ‘தேசிய துப்பாக்கிப் படை'' என்றும் புதிய அணி ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது.

எல்லைக் காவல் படை, ரிசேர்வ் படை போன்று இயங்கும் ஏழு பரா படைகளும் உள்நாட்டுக் கலகங்களை அடக்குவதில் முழு வெற்றியீட்டத் தவறியதாலேயே இந்தப் புதிய அணி உருவாக்கப்படுகிறது.

இராணுவத்தில் இருந்து 10 ஆயிரம் பேரைத் தெரிவு செய்து இந்த அணி உருவாக்கப்படவிருக்கிறது.

உள்நாட்டுக் கலகங்களை அடக்குவதற்கு இராணுவத்தை அழைப்பதை உயர் அதிகாரிகள் விரும்பாததாலேயே இந்தப் படைப் பிரிவு உருவாக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

காஷ்மீர், பஞ்சாப், அஸாம் மாநிலங்களில் தீவிரவாதிகளின் மிரட்டல்களை அடக்குவதற்கு பொலீஸாருக்குப் பதிலாக தேசிய துப்பாக்கிப்படை அழைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org